# "அ.தி.மு.க. ஆட்சியில் காவல் நிலையச் சாவுகள்" - ஒரு கண்ணோட்டம்!

திருப்புவனம் அருகே நடந்த காவல் மரணத்தில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் எடுத்துள்ள நடவடிக்கைகளை வேற்கத் தகுந்தது. போலீஸ் விசாரணையில் சிவகங்கை மாவட்டம் மடப்புரம் கோயில் காவலாளியான அஜித்குமார் இளைஞர் காவல்துறையினரால் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது அறிந்து உடனடியாக இது தொடர்பாக 5 போலீசார் உடனே கைது செய்யப்பட்டார்கள். அஜித்குமாரின் குடும்பத்தினரை அமைச்சர் பெரிய கருப்பன் சந்தித்து ஆறுதல் கூறியதோடு, அரசின் சார்பில் வீட்டுமனைப் பட்டாவும், அஜித் குமாரின் தம்பிக்கு அரசு வேலைக்கான நியமன உத்திரவும் வழங்கப்பட்டுள்ளது. தொடர்புடைய அஜித்குமாரின் தாயாரிடமும், அவரின் தம்பியின் இடமும் "ரொம்ப தைரியமாக இருங்கள். உரிய நடவடிக்கை எடுக்கச் சொல்லி உள்ளேன். நடக்கக்கூடாது நடந்து விட்டது. என்ன செய்ய வேண்டுமோ அமைச்சரிடம் சொல்லிச் செய்யச் சொல்லி உள்ளேன். நடந்தது யாராலும் ஏற்க முடியாது; ஒத்துக்கவும் முடியாது. தண்டனை விரைவில் பெற்றுத் தருவோம்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் செல் பேசி மூலம் ஆறுதல் கூறியுள்ளார்.

மேலும், முதல்வர் வெளியிட்ட அறிக்கையில் காவல்துறை நடத்திய தாக்குதலால் தான் மரணத்திற்குக் காரணம் என்பதை அறிந்தும் மிகவும் வேதனை அடைந்தேன். இது யாராலும் நியாயப்படுத்த முடியாதது. காரணம் சொல்லி தப்பிக்க முடியாத செயல். இந்த சம்பவம் தொடர்பான குற்றச்சாட்டப்பட்ட ஆறு போலீசார் மீது உடனடியாகச் சம்பவம் நடந்த அன்றே பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்; இத்தகைய வழக்குகளில் பின்பற்றப்பட வேண்டிய சட்ட நடைமுறைப் படி விசாரணை மேற்கொள்ளப்பட்டது: ஐந்து போலீசார் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டு வழக்கு நடைபெற்று வருகிறது; வழக்கு விசாரணை சிபிஐக்கு மாற்றப்பட்டுள்ளது; சிவகங்கை மாவட்ட கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத்காத்திருப்போர் பட்டியலிலும், மானா மதுரை டி.எஸ்.பி சண்முகசுந்தரம் பணியிடை நீக்கமும் செய்யப்பட்டுள்ளனர். சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது; இனி எந்தக் காலத்தில் இது போன்ற செயல்கள் எங்கும் யாரால் நடந்து விடக்கூடாது என்று காவல்துறைக்கும் எச்சரிக்கை செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

காவல்துறை இயக்குனர் ஜெனரல் சங்கர் ஜிவால். இயங்கி வரும் அங்கீகரிக்கப்படாத தனிப் படைகளை ஜூலை 2 முதல் கலைக்க உத்தரவிட்டுள்ளார். திருப்புவனம் வழக்கறிஞர் கார்த்திக் ராஜா, சிவகாசி வழக்கறிஞர் மாரிஸ் குமார் ஆகியோர் பொதுநல மனுக்கள் தாக்கல் செய்திருந்தனர். மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் போடப்பட்ட வழக்கில். "விசாரணையை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க சி.பி.ஐ.க்கு உத்தரவு போட வேண்டும்" என்று கூறப்பட்டது. நீதிபதிகள் எஸ்.எம். சுப்பிரமணியம், மரியா கிளெட் ஆகியோர் அமர்வு. "அறிவியல் பூர்வமாக விசாரணை நடந்துள்ளது; நேரில் பார்த்த சாட்சியத்திற்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது; விசாரணை அதிகாரி அனைத்துத் தடயங்களையும் சேகரித்துள்ளார்; நீதிபதி அறிக்கை மற்றும் பிணக் கூராய்வுப் பரிசோதனை அறிக்கையை பார்க்கும் போது. அஜித்குமாரின் மரணம் சட்டவிரோத லாக்கப் டெத் என்பது உறுதியாகி உள்ளது; எனவே, சிபிஐ விசாரணையை நீதிமன்றம் கண்காணிக்கும். விரைவாக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்; நீதிபதி கிட்டத்தட்ட 50 சதவீத விசாரணையை முடித்துள்ளார்; மற்றவை சிபிஐ விசாரணையில் தெரிய வரும்." என்று கூறி உள்ளது.

ஆனால் எடப்பாடி பழனிசாமியோ, தனது தலைமையிலான அதிமுக ஆட்சியில் நடைபெற்ற தமிழ்நாட்டையே உலுக்கிய சாத்தான்குளம் தந்தை, மகன் ஜெயராஜ், பெனிக்ஸ் காவல் கொட்டடியில் நடந்த கொடூர படுகொலையையும், சம்பவத்தின் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்காமல் கால தாமதப்படுத்திய அநீதிச் செயல்பாடுகள் அனைத்தையும் மறைத்துப் பேசி வருகிறார். அவரைப்போல, அரசியலில் அனாதையாகி போன உடன் பங்காளியான ஓ. பன்னீர் செல்வம், "தமிழகத்தில் திமுக ஆட்சி தன் வீழ்ச்சியை உறுதியாக எட்டும்; ஜெயலலிதா காவல்துறையைத் தன் கட்டுப்பாட்டில் வைத்து சிறப்பாக ஆட்சி செய்தார்; ஆனால், திமுக ஆட்சியில் அதிகாரிகளின் எண்ணப் படி காவல்துறை நடக்கிறது..." என்று ஆரூடம் கூறியுள்ளார்.

அதிமுக ஆட்சியில் நடைபெற்ற காவல் நிலையச் சாவுகள், என்கவுண்டர்கள் போன்றவை மக்கள் மறந்து விட்டார்கள் என்று நினைக்கிறார்களா? பொது மேடையில் ஏறி விளக்கம் கூற சைவக் குழந்தைகளா இந்த உத்தமபுத்திரர்கள் தயாரா?

**அதிமுக தலைவி ஜெயலலிதா முதன் முதலில் முதலமைச்சராகப் பொறுப்பேற்று ஆட்சியில் இருந்த போது, 1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற காவல் நிலையச் சாவுகள் பற்றி "பீப்பிள்ஸ் வாட்ச் – தமிழ்நாடு" (Peoples, watch – Tamilnadu) என்ற ஆய்வு குழு அறிக்கையின் படி, ஒரு பட்டியல் தந்துள்ளது.**

**1991–92 இல் காவல் நிலையச் சாவு 12 பேர். 1992– 93 இல் 16 பேர் சாவு. 1993–94 இல் 17 பேர் சாவு. 1994–95 இல் 14 பேர் சாவு. 1995 – (31–05–1996 வரை) 2 பேர் சாவு.அதாவது 31–05–1996 வரை உள்ள ஐந்து ஆண்டுகளில் ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தில் மரணமுற்ற சிறை மறைத்தாலும், ஏறத்தாழ 80 பேர் காவலர்களின்தாக்குதல், சித்திரவதையால் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்ற விவரம். "தமிழகத்தில் மனித உரிமைகள்" எனும் தலைப்பில் தந்துள்ளது. தேசிய மனித உரிமை ஆணையத்திலும் இத்தகைய தரப்படுப் பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் இந்த ஆய்வறிக்கை கூறுகிறது.**

தமிழ்நாட்டில் ஜெயலலிதா தலைமையில் அதிமுக ஆட்சி நடந்து கொண்டிருந்த போதுதான். 1992 ஆம் ஆண்டு மே 30 முதல் ஜூன் 2 வரையிலான ஐந்து நாட்கள் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகம் உள்ள அண்ணாமலை நகர் காவல் நிலையத்தில் மறக்க முடியாத லாக்கப் சாவு நடைபெற்றது. சட்ட ஒழுங்கு பாதுகாக்க வேண்டிய காவல்துறை அதிகாரிகள். விசாரணை என்ற பெயரால் நந்தகோபால் என்ற 36 வயது இளைஞர் ஒருவரை லாக்கப்பில் வைத்து அடித்து, துவைத்தார்கள். இது பற்றிக் கேள்விப்பட்ட அவருடைய மனைவி பத்மினிகாவல் நிலையம் வந்தவரை கணவன் முன்னாலேயே பாலியல் கொடுமைகள் செய்யப்பட்டாள். எதிர்த்துப் போராடிய நந்தகோபாலை 4 போலீஸார் குண்டாந் தடியால் அடித்து, பூட்ஸ் காலால் மார்பில் ஏறி மிதித்ததாலும் கொலை செய்யப்பட்டார். இது குறித்து கலைஞர் உள்ளிட்ட அரசியல் கட்சிகள் கண்டனம் தெரிவித்துப் போராட்டம் நடத்திய போதும் எந்தவித சட்ட நடவடிக்கை ஜெயலலிதா அரசு எடுக்கவில்லை; உச்சநீதிமன்றத்தில் "ஐ.பி.சி 302 படி ஏன் பதிவு செய்து .காவல் துறை அதிகாரிகளுக்கு மரண தண்டனை தந்திருக்க வேண்டும்; மாறாக, 37 சாட்சிகள் சொல்லியும் கொலை கற்பழிப்பு பிரிவு பதிவு செய்யாமல் விட்டது ஏன்? அவர்களைக் கைது செய்து காவலில் வைக்காமல் ஒரு மாவட்ட நீதிபதி புலன் விசாரணைக்கு ஏற்பாடு செய்தது எப்படி? என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மார்க்கண்டேய கட்சு, ஞான சுதா மிஸ்ரா அமர்வு கேட்டது. இன்றைக்கும் அது அழிக்கப்படாத சாட்சியத் தீர்ப்பாக உள்ளதே! அதை மறைத்தது ஏன்?

1992 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 அன்று தர்மபுரி மாவட்டம் வாச்சாத்தி என்ற கிராமத்தில் சந்தனக் கடத்தல் வீரப்பனைத் தேடுகிறோம் என்று சொல்லிக் காவல்துறை, வனத்துறை, வருவாய்த்துறை அதிகாரிகள் என 267 பேர் கொண்ட தனிப்படை ஆதிவாசிகளான பழங்குடி மக்களைத் திடீர் சோதனை என்ற பேரால் சித்ர வதை செய்தார்கள். மூன்று நாட்களாகத் தனி முகாம் காவல் அடைப்பு லாக்கப்புகளில் அடைக்கப்பட்டு 18 பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள். 90 பெண்கள் 28 குழந்தைளையும் அரூர் வனப் பாதுகாப்பு அலுவலகத்தில் சட்ட விரோதமாக அடைத்து அவர்களை அடித்து நொறுக்கிக் காயப்படுத்திக் கொடுமைப்படுத்தினார்கள். அன்றைய முதல்வர் ஜெயலலிதாவின் ஆட்சியில் போராட்டக் கதவுகளைத் தட்டிய போதும்; எந்தப் பயனும் கிட்டாத நிலையில், உயர்நீதிமன்றம் உச்ச நீதிமன்றத்தில் 30 ஆண்டுகளுக்குப் பின் நீதி கிட்டியது என்பதை மறந்து விட்டார்களா?

1995 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தென்பகுதியில் இரு சமுதாய மக்களது பிரச்சினையைத் தீர்க்காத அதிமுக அரசு, போலீஸ் பட்டாளத்தை விட்டு நூற்றுக்கு மேற்பட்ட கிராமங்களில்கோடிக்கணக்கான உடமைச் சொத்துக்களை எல்லாம் சூறையாடி அழிக்கப்பட்டன. பல நூறு குற்றுயிரும் கொலையுயிருமான உடல்கள் மருத்துவமனையில் சிதைந்து கிடந்தன. விசாரணைக்காகப் பலபேர் லாக்கப்பில் அடைக்கப்பட்டுச் சித்திரவதைச் சாவைச் சந்தித்த கெடியங்குளம் துப்பாக்கிச் சூட்டை மறந்து விட முடியுமா?

1980 களில் எம்ஜிஆர் ஆட்சியில் இடம் பெற்றிருந்த அமைச்சர் காளிமுத்து, இராபின் மோயின், கிளி சித்ரா என்பவர்களுடன் வங்கிப் பணப் பரிமாற்ற மோசடி வழக்கில் சிக்கி இருந்தார். இராபின் மொய்ன் கைது செய்யப்பட்டு எழும்பூர் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டு இருந்த நிலை அறிந்த முதல்வர் எம். ஜி.ஆர், ஒரு நாள் காலையில் காவல் நிலைய அடைப்பான லாக்கப் வரை சென்று பார்த்துத் திரும்பினார். இது சட்டத்தை வளைக்க காளிமுத்துவுக்காக எம்ஜி ஆர் செய்த சூழ்ச்சி என்று உடனே, கலைஞர் உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்கள் சட்டமன்றத்திலும், வெளியிலும் வன்மையாகக் கண்டித்துக் கேள்விகள் எழுப்பினர். நீண்ட காலமாக மோசடி மன்னன் இராபின் மொயின், காளிமுத்து வழக்கு நீதிமன்றத்தில் நடந்து வந்தது. முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர். லாக்கப் வரை சென்று, ஒரு குற்றவாளிக்காகத் தன் சக அமைச்சர் காளிமுத்தைப் திருப்திப்படுத்த வேண்டி காவல்துறையை அச்சமூட்டித் திரும்பியது மட்டுமல்ல; அது போன்ற சட்டம் மீறல்களை ஜெயலலிதா ஆட்சியில் பலர் லாக்கப்பிற்கே சென்று குற்றவாளிகளை மீட்டு வந்த வரலாறுகள் மேலும் நீள்கின்றன.



கவிஞர் தமிழ்தாசன்
கழகத் தீர்மானக் குழுத் தலைவர்

**2011 ஆம் ஆண்டு, ஜூன் மாதம் முதல்வர் ஜெயலலிதா பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்திக்க டெல்லி சென்றார். (12–6–11) அன்று நள்ளிரவு சென்னை, அண்ணா மேம்பாலம், நுங்கம் பாக்கம் சந்திப்பில் அதிமுகவினர் சிலர் கூடி குடித்து விட்டு வன்முறைச் செயலில் ஈடுபட்டதைத் தடுத்து, கண்டித்த காவல்துறையினரிடம் அத்துமீறி நடந்து கொண்டதால்; அவர்களை நுங்கம்பாக்கம் காவல் நிலையத்திற்கு விசாரிக்க அழைத்துச் சென்றிருந்தனர். இந்தச் செய்தியை அறிந்த அன்றைய அமைச்சர் செந்தமிழன் என்பவர் காவல் நிலையத்திற்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டதுடன், தனது ஆட்களை அனுப்பி; கைது செய்து வைக்கப்பட்ட அதிமுக வினரை விடச் சொல்லி மிரட்டினார். இதெல்லாம் விட, அந்நாளில் அமைச்சராக இல்லாத சட்ட மன்ற உறுப்பினராக இருந்த வளர்மதி நேரடியாக நுங்கம்பாக்கம் காவல் நிலையத்திற்கு சென்றார்.**

**அங்குள்ள ஆய்வாளர் உள்ளிட்ட அதிகாரிகளையும், உதவி ஆணையர் மிரட்டிக் காவல் நிலையத்தில் இருந்த தனது கட்சிக்காரர்களை மீட்டுக் கொண்டு சென்றவர் தான் வளர்மதி. அவர் மீது எந்த வழக்கும் போடவில்லை உதவி ஆணையாளர் திருநாவுக்கரசு ஆவடி பட்டாலியனுக்கு உடனடியாக மாற்றப்பட்டார். இதைப் போல அம்பத்தூரில் குற்றச் செயலில் ஈடுபட்ட தன் சகோதரி மகன் ரௌடி ஒருவர், 2011ஜூலை மாதம் காவல் நிலையத்தில் விசாரணைக்காக அழைத்து வரப்பட்டவரை வேதாசலம் என்ற அதிமுக சட்டமன்ற உறுப்பினர் காவல் நிலையத்திற்கு புகுந்து காவலர்களை அச்சுறுத்தி ரௌடியை மீட்டுச் சென்றார். வேலூர் அதிமுக செயலாளர் பார்த்திபன் என்பவர் சோளிங்கரில் காவல் நிலையத்தில் அடைத்து வைக்கப்பட்ட விசாரணை கைதியைக் காவல் நிலையத்திலிருந்து இழுத்துச் சென்று விட்டார். சென்னை துரைப்பாக்கத்தில் தன்னைக் கொலை செய்ய வந்ததாக, செல்வம் என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில், ரவுடி பன் சேகர்க்கு எதிராகப் புகார் கொடுத்திருந்தார். விசாரணைக்கு அழைத்து வரப்பட்ட அவனை; விருகை ரவி என்ற அதிமுக காரர் துரைப்பாக்கம் காவல் நிலையம் சென்று மிரட்டி மீட்டுக் கொண்டு சென்று விட்டார்.**



அதைப்போல, அக்ரி கிருஷ்ணமூர்த்தி என்பவர் திருவண்ணாமலை மாவட்டத்தினுடைய செயலாளராக இருந்தவர். 2013 ஜூலையில் ஜெலட்டின் குச்சிகள், குவாரிகளுக்கு வெடி வைக்கும் தோட்டாக்கள் ஏற்றிச் சென்ற வாகனத்தை மடக்கிய போளூர் கணேசன் என்ற டி.எஸ்.பி. ஆவணம் கேட்டு விசாரித்து தடுத்து நிறுத்தினார். உடனே ஓட்டுநர் வாகன முதலாளியான கடலாடி மணி என்பவருக்கு தகவல் தரப்பட்டது; அவர் அக்ரி கிருஷ்ணமூர்த்திக்குத் தகவல் கொடுத்தார். அவ்வளவுதான்; ஒரு கோயில் திருவிழாவின் காவலுக்கு வந்திருந்த டி.எஸ்.பி. கணேசன் என்பவரை நேரடியாக வந்து "நீ என்ன பெரிய இவனா? டாக்குமெண்ட் கேட்பியா?" என்றெல்லாம் மிரட்டப்பட்ட வரலாறு அன்றைக்கு நக்கீரன் போன்ற ஏடுகள் எழுதி இருக்கின்றன.

சாராயம் காய்ச்சியவர்கள் என்று சொல்லி விசாரணைக்காகக் கைது செய்யப்பட்ட சிலரைக் காவல் நிலையச்சிறையில் (Lock - up) அடைத்து வைத்திருந்தனர். அந்த விவரம் தெரிந்த அத் தொகுதி இரவிச்சந்திரன் நேரடியாகவே காவல் நிலையம் சென்று, காவலர்களின் மிரட்டியதோடு "எப்படி என் கட்சிக் காரர்களைக் கைது செய்து அடைத்து வைக்கலாம்?" என்று சொல்லி லாக்கப்பை திறந்து கூட்டிக் கொண்டு சென்றார். இந்தச் செய்தி தெரிந்த கலைஞர் உட்பட அனைவரும் எதிர்த்துக் குரல் கொடுத்தனர். சட்டமன்றத்திலும் பேசப்பட்டது. இரவிச்சந்திரனை வீட்டிற்கு வரவழைத்து அவரை சாதியைச் சொல்லி அறைந்தார் என்ற செய்தியைத் திருநாவுக்கரசர் தனது நூலில் தெரிவித்துள்ளார்.

அதிமுகவில் இருந்து வந்து திமுகவில் சேர்ந்து, தற்போது பாஜகவில் ஐக்கியமாகி இருக்கிறார் கே.பி. இராமலிங்கம் என்பவர். அவர் திமுகவில் இருந்த போது ஜெயலலிதா ஆட்சியில், ஒரு நாள் நள்ளிரவில் கைது செய்யப்பட்டு, சென்னைக் காவல் துறை ஆணையர் அலுவலகத்தில் இருந்து சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கே அவரை ஜட்டியோடு உட்கார வைத்து, உணவு கூட கொடுக்காமல் லாக்கப் அறையில் பூட்டி வைத்த கொடுமைகள் பற்றிய செய்தியைக் கேட்டறிந்த கலைஞர் அவர்கள்; கழக முன்னணியினரை அனுப்பி வைத்துப் பார்க்க வைத்தார். அத்துடன், சட்டமன்றத்தில் பரிதி. இளம்வழுதியைப் பேசிட செய்ததால்; அவருடைய சட்டை கிழிக்கப்பட்டு, வேட்டியும் அவிழ்க்கப்பட்டு, அவமானப் படுத்தப்பட்டதுடன், அந்தக் கூட்டத் தொடர் முடியும் வரை சட்டசபையில்கலந்து கொள்ளவும் தடை விதிக்கப்பட்டவரலாறு உண்டு. காரணம், 1987-இல் எம்ஜி ஆர் மறைந்து, அவருடைய உடல் பீரங்கி வண்டியில் எடுத்துச் சென்ற நேரத்தில், செருப்பு கால்களோடு ஜெயலலிதா ஏறினார் என்பதால், கீழே இறக்கிவிடக் காரணமானவர் கே.பி. இராமலிங்கம்.அதற்காகப் பழி வாங்கும் நடவடிக்கை தான் மேற்கண்ட ஜெயலலிதா செய்த லாக்கப் செய்தி.

அதைப்போல சதிக லாவின் கணவர் எம். நடராஜன் ஒரு வழக்கில் கைது செய்யப்பட்டார். சென்னையில்காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு லாக்கப்பில் கே.பி. இராமலிங்கம் போல் அமர வைக்கப்பட்ட அவர்; சிறைக்குள் கொண்டு சென்று அடைக்கப்பட்டார். பிறகு எழும்பூர் நீதிமன்றத்தில் கொண்டு வரப்பட்ட போது என்னை ஜெயலலிதாவின் போலீஸ் என்கவுண்டர் செய்ய முயற்சி செய்கிறது என்று செய்தியாளருக்குப் பேட்டி கொடுத்தார். ஆனந்த விகடன் இதழ் இது பற்றிய செய்தி எழுதி இருக்கிறது. அதைப் போல் தஞ்சையில் அவர் தந்தையார் இடத்தில் கல்லறை கட்டப் போகிறேன் என்று கூறிதன் சொந்த ஊரில் இராமலிங்கம் என்பவரின் 15,000 ஏக்கர் நிலத்தை அபகரித்தார் என அவர் கைது செய்யப்பட்டுத் திருச்சி சிறையில் அடைக்கப்பட்டார். ஜெயலலிதா ஆட்சியில் நடைபெற்ற லாக்கப் செய்திகளை மற்றவர்களிடம் கூறி வருத்தப்பட்டுள்ளார்.

2001 ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா, "பொடா" சட்டத்தில் வைகோ, பழ. நெடுமாறன், நக்கீரன் கோபால், சுப. வீ.போன்றவர்களைக் கைது செய்து காவல் நிலையத்தில் துன்புறுத்திச் சிறைக்குள் அடைத்த வரலாறு மிக நீண்டது. அதைப்போல "தடா" சட்டத்தின் மூலம் வைகோவின் தம்பி இரவிச்சந்திரன், முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன், அவர் கணவர் ஜெகதீசன் ஆகியோர் ஓராண்டு காலம் சிறையில் அடைக்கப்பட்டார்கள். அதிமுக ஆட்சியில் சிறையில் அடைப்பதற்கு முன்னால், லாக்கப் செய்திகள் பெரிதாகின. சிறைக்குள்ளே சுப்புலட்சுமி ஜெகதீசனை வளர்மதி என்பவர் சென்று மிரட்டியதாக நக்கீரன் எட்டின் செய்திகள் வரலாறு பேசிக் கொண்டிருக்கினறன.

இது மட்டுமா? ஜெயலலிதா அம்மையாருக்கு ஏதோ ஒரு விதத்தில் வேண்டாத நபர்கள் எல்லாம், பழிவாங்குவதற்காகக் காவல் நிலைய "லாக்கப்" நட்புக்கு அனுப்பப்பட்டார்கள்! எம்ஜிஆரின் உதவியாளர் முத்து, எம். நடராஜன் நண்பர் செரினா, உச்ச நீதி மன்ற நீதிபதி ஏ.ஆர். இலட்சுமணன் மருமகன், ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் வி.என். சுதாகரன் போன்றோர் கஞ்சா பொய் வழக்கில் காவல் நிலைய லாக்கப்புகளைச் சந்தித்து விட்டுத்தான் சிறைக்குள் சென்றிருக்கிறார்கள்.

எழுத்தாளர் ஆசிரியர் "சாவி" அவர்கள் தனது வார இதழில் அட்டைப்படத்தில் கார்ட்டூன் ஒன்றை போட்டு விட்டார் என்று கூறி, அவரை கைது செய்து அமைந்தகரை காவல் நிலையத்தில் வைத்த ஆட்சிதான் அதிமுக அரசு. இது அறிந்த கலைஞர் நேரடியாகவே காவல் நிலைய லாக்கப்பிற்கே சென்று விட்டார். அவரை விடுதலை செய்யவில்லை என்றால், போராட்டத்தை அறிவிப்பேன் என்று கலைஞர் அறிவித்தார்.அதன் பின்னர் விடுவிக்கப்பட்டார் சாவி.

அதிமுக ஆட்சியில் காவல் நிலைய சாவுகள் அதிகரித்து வந்தன. : 2013 செப்டம்பர் 25 அன்று சோழவரம் பாரதி என்பவர் மகன் அருண் என்பவர் மீது அபாண்டமாக குற்றச்சாட்டு கூறி, யானை கவுனிகாவல் நிலையத்தில் லாக்கப்பில் அடைத்து வைத்து, விசாரணை என்ற பெயரால், கொடூரமாக அடி, உதை சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டார். மரண காயம் கூடும் இருந்த அவரைப் பார்த்த அவருடைய தந்தையார் சோழவரம் பாரதி, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு போட்டார். வழக்கை விசாரித்த நீதிபதி பால் வசந்தகுமார் அரசுக்குக் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்தோடு, பாதிக்கப்பட்ட அருண் என்பவர்க்கு 50 ஆயிரம் ரூபாய் வழங்கவும், சித்திரவதை செய்த காவல் துறை அதிகாரிகள் மீது கடுமையான நிருவாக நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட்டார்.

சென்னை உடுமலைப்பேட்டையில் ஒரு வீட்டில் தங்கி வேலை செய்து வந்த பெண் சந்திரா என்பவரை, ஒரு கொலை சம்பவத்தைத் தொடர்புப் படுத்திக் கைது செய்தனர். விசாரணை என்ற பெயரால் அழைத்துச் சென்ற போலீசார், லாக்கப்பில் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு, பிறப்புறுப்பில் லத்தியைச் செருகி இரத்தம் கசிய, கசிய காயங்களோடு; சிறைச்சாலைக்குள் அடைத்தார்கள். மேலூரிலிருந்து வந்த அவருடைய மகள் நேரில் பார்த்துக் கண்ணீர் விட்ட அவர்; சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு போட்டார். உயர் நீதிமன்றம் மருத்துவ பரிசோதனைகள் மற்றும் விசாரணைகள் மேற்கொண்ட பின்னர், கடுமையான கண்டனத்தை ஜெயலலிதா தலைமையிலான அதிமுக ஆட்சிக் காவல்துறைக்குத் தெரிவித்தது.

**இராமநாதபுரம் எஸ்.பி. பட்டணம் எனும் ஊரில் ஓர் இளைஞரைச் சுட்டுக் கொன் ற துயரச் சம்பவம் நடைபெற்றது. (20.12.2014) அன்று அருள்தாஸ் மெக்கானிக் கொடுத்த புகாரை ஒட்டி விசாரணைக்காக அழைத்து வரப்பட்ட அல்லா பிச்சை என்பவரின் மகன் இளைஞர் கே. சையது முகமது என்பவரை பட்டப் பகலிலே இரண்டரை மணி அளவில் காவல் நிலைய லாக்கப்பிலே வைத்து அடித்து உதைத்துத் துணை ஆய்வாளர் காளிதாஸ் என்பவர் துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற கொடூரக் கொடுமை நடைபெற்றது.**

**சென்னை மெரினா கடற்கரை அண்ணா கல்லறை காவல் நிலையம், நீலாங்கரை காவல் நிலையத்தில் ஒரு சிறுவனை விசாரணை என்ற பெயரில் துப்பாக்கியைத் தொண்டையில் வைத்துச் சுட்டு மிரட்டித் தாக்கிய சம்பவங்கள் நடைபெற்றன. அதைப் போலத் தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் ஏழு வாக்கி டாக்கிகள், செல்போன்கள் காணவில்லை; திருட்டு என்றும்; விசாரணை என்ற பெயரால் தியாகராயர் நகர், மாம்பலம் காவல் நிலைய லாக்கப்புகளில் ஒரு சிறுவனை மாற்றி, மாற்றி வைத்து, ஓரினச் சேர்க்கை செய்யக் கட்டாயப்படுத்தி அடித்துத் துவைத்த கொடுமைகள் எல்லாம் ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த அதிமுக ஆட்சியில் தான் அரங்கேற்றங்கள் நடைபெற்றன.**

2012 ஆம் ஆண்டு சிவகங்கை மருதுபாண்டியர் குரு பூசை, மாவட்டப் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த இளம் காவல் உதவி ஆய்வாளர் ஆல்வின் சுதன் என்பவர் ரவுடிகள் சிலரால் கொலை செய்யப்பட்டார். இதில் தொடர்புடையவர்கள் என்று கூறப்பட்ட திருப்பாசேத்தி - புதுக்குளம் சேர்ந்த ரவுடிகள் பிரபு (25), பாரதி (35) ஆகியோர் கைது செய்து சிறைக்குள் அனுப்பப்பட்டிருந்தார்கள். இவ் வழக்கு தொடர்பாகச் சந்தனக் கடத்தல் வீரப்பன், சென்னை அயோத்திக் குப்பம் வீரமணி, திருச்சி ரவுடி கோசி ஜின்னா, மதுரை கல்லு மண்டையன், கவியரசு, உள்ளிட்ட 12 பேரை என்கவுண்டரில் கொலை செய்து புகழ் படைத்த வெள்ளைத்துரை என்ற ஏ.டி.எஸ்.பி. அதிகாரியை மதுரை யிலிருந்து மாற்றப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

பின்னர் குற்றவாளிகளைச் சிறையிலிருந்து வெளியில் கொண்டு வர, பிணையில் எடுக்க ஏற்பாடு செய்த காவல்துறையினர், குற்றவாளிகள் தப்பித்து ஓட முயற்சி செய்தார்கள் என்று சொல்லி என்கவுண்டரில் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று காவல் துறையினர் மீது புகார் கூறிப் போராட்டங்கள் நடந்தன. லாக்கப்பில் ரவுடி கொக்கி குமாரைக் கொடூரமாகத் தாக்கிக் கொலை செய்யப்பட்டான்.இவர்களைத் தீர்த்துக் கட்டுவதற்காக வே வெள்ளைத்துரை ஏ.டி.எஸ்.பி மாற்றப்பட்டு வந்தார் என்று, இன்று வரை மனித உரிமைகள் ஆணையம் மற்றும் நீதிமன்றத்தில் வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பல்லடத்தைச் சேர்ந்த காவல்துறை துணை ஆய்வாளருடன் காதல்,பாலியல் தொடர்பு வைத்து இருந்ததாகவும், அவரை மறுத்து வேறொரு பெண்ணைத் திருமணம் செய்யவுள்ளதாகவும் கூறி அவர் கொடுத்த புகாரின் அடிப்படையில், நீலகிரி மாவட்ட நீதிபதி எஸ். தங்கராஜ் என்பவரை கைது செய்து சிறைக்கு அனுப்பப்பட்டார். (29-06-2013) அப்படி கைது செய்யும் போது, மூன்று காவல்துறை அதிகாரிகள் உட்படக் காவலர்கள்; உச்ச நீதிமன்ற விதிமுறைகளையோ அல்லது குற்றஞ் செய்த நீதிபதியைக் கைது செய்யப்பட வேண்டிய சட்ட நெறிமுறைக் அறிவுரைகளை பற்றியோ பின்பற்றாமல்; நீதிபதியைக் காவல் நிலையத்தில் லாக்கப்புக்குக் கொண்டு செல்லப்பட்டதுடன், நீதிபதி முன் நிறுத்தும் போதும் விசாரணை நீதிபதியும் சட்ட நெறிமுறைகளைக் கண்டுகொள்ளாமல் சிறைக்குள் தள்ளினர். இது குறித்து வழக்கு போட்ட போது, மாவட்ட எஸ்.பி யாக இருந்தவர் ஆர். பொன்னி நிபந்தனையற்ற மன்னிப்பு கூறினார். ஆனாலும், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி என்.பால் வசந்தகுமார், எம்.சத்ய நாராயணன் அமர்வு கடுமையாகக் கண்டித்தது. இந்த நிகழ்வு நடந்தது அதிமுக ஆட்சியில் தான்.

திருப்பூரில் பணியாற்றிக் கொண்டிருந்த ஏ.எஸ்.பி. யான சிபி சக்ரவர்த்தி என்பவர் ஓர் இஸ்லாமிய இளைஞரை குற்ற விசாரணை மேற்கொண்டு லாக்கப்பில் வைத்து அடித்து கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டு அவர் மீது எழுப்பப்பட்டது. அவர் எஸ்.பி. யாக பதவி உயர்வு பெற்று நாகப்பட்டினம் வந்து சேர்ந்தார். அவர் மீது மனித உரிமை கமிஷன் புகார் கொடுக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அரசியல் கட்சியில் பொதுமக்கள் பெரிதும் குற்றச்சாட்டாக எழுப்பினர். இது பற்றி ஜூனியர் விகடன் (05-06-2013) போன்ற ஏடுகள் புலனாய்வு செய்து எழுதியது.

பரமக்குடி ராமநாதபுரத்தில் இருந்து 26 வயதுடைய இராமானுஜன் மகன் வெங்கடேசன் என்பவனை தாஜுல்தா நகர், மதுரையில் திருட்டு வழக்கில் தொடர்பாக எமனேஸ்வரம் போலீஸ் ஸ்டேஷனில் கைது செய்யப்பட்டு லாக்கப்பில் வைக்கப்பட்டான். அவனைச் சட்டவிரோதமாகக் கொடூரமாகத் தாக்கி அடித்துக் காயப்படுத்தி விசாரிக்கப்பட்டதில், செத்துப் போனான். முனியப்பன் துணை ஆய்வாளர் முனியப்பன் ராஜ், உட்பட 4 பேர் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். இப்படிப்பட்ட லாக்கப் சாவுகள் அதிமுக ஆட்சியில் கொடி கட்டிப் பறந்தன.

எடப்பாடி தலைமையிலான அதிமுக ஆட்சியில் லாக்கப் தாக்குதல்களில் சாவுகள் நடைபெற்றன. 2018 மார்ச் ஒன்றில் மதுரை ரவுடிகள் முத்து, வீரமணி, இருளாண்டி, சகுனி கார்த்தி ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டனர். மாயக்கண்ணன் என்பவன் தப்பி ஓடிவிட்டான். அவர்களில் ஒருவன் அதிமுக ஆட்சியில் விசாரணை என்று கூறி காவல் நிலைய அடைப்பில் (லாக்கப்) பல பேர் அடித்துக் கொல்லப்படுகிறார்கள் என்று கூறினான்.

2012-13 ஆம் ஆண்டுகளில் ஜெயலலிதா தான் முதலமைச்சராக இருந்தார்.அப்போது மதுரையில் பால் வியாபாரி சுரேஷ், இராமநாதபுரம் பரமக்குடி பூசாரி முருகன், வேலூர் பாஜக மருத்துவ பிரிவுச் செயலாளர் அரவிந்த ரெட்டி, பாஜக மாநிலச் செயலாளர் ஆடிட்டர் இரமேஷ் மேலும் சிலர் அடுத்தடுத்து கொல்லப்பட்டனர். கொலைகளுக்கு காரணம் என்று ஒரு சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த ஒருவரை பிடித்து அவர்தான் என்று டிஜிபி ராமானுஜம் கூறினார் பிறகு போலீஸ் பக்ருதீன் என்று கூறி லாக்கப்புகளில் வைத்து, அடித்து சிறையில் அடைத்தனர். பரமக்குடியில் கொலை செய்யப்பட்ட முருகன் என்பவரைக் கொலை செய்ததாக சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த அப்பாவி ஒருவரைச் சென்னை பெரிய மேட்டில் கைது செய்தது போலீசு.

லாக்கப்பில் வைத்து அடித்துத் துவைத்து அவரது கை, கால்கள் முறிக்கப்பட்ட நிலையில் நடமாட முடியாதபடி, சிறையில் அடைத்தனர். அவர் மனைவி பரமக்குடியில் பள்ளி ஆசிரியராக பணி புரிந்து வந்தவரை கொலையாளியின் மனைவி என்று கூறிப் அப்பள்ளியில் இருந்து நீக்கி விட்டார்கள். அதைப்போல அவரது மகளைத் திருமணத்திற்காகப் பெண் பார்க்க நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தார்கள். ஒரு கொலையாளியின் பெண்ணா? என்று நிறுத்தி விட்டார்கள். இது குறித்து பல ஏடுகள் எழுதி இருந்தாலும், அதிமுக ஆட்சியின் லாக்கப் சித்தரவதை முறையை ஆங்கில ஏடு இந்தியன் எக்ஸ்பிரஸ் நீண்ட கட்டுரையாக எழுதி இருந்தது. அதில் மணப்பாறை காவல் நிலையச் சிறை அடைப்பு லாக்கப் அத்துமீறல் போக்குகளையும் சுட்டிக்காட்டிருந்தது. இது குறித்து முதல்வர் ஜெயலலிதா விடம் பேசுவதற்கு மூன்று முறை கடிதம் எழுதியதாகவும்; அதே நேரத்தில் அவர் தன்னை அழைக்கவில்லை என்றும், பா.ஜ.க. தலைவர் இல.கணேசன் தற்போதைய நாகலாந்து ஆளுநர் வெளிப்படையாகவே பேசி இருந்தார்.

அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த சிவந்தி ஆதித்தனை பார்க்கப் போகிறேன் என்று முதல்வரா இருந்த ஜெயலலிதா, செருப்புகளுடன் அவசர சிகிச்சைப் பிரிவில் அவரது படை பரிவாரங்களுடன் உள்ளே நுழைந்தார். அப்பொழுது குடும்ப மருத்துவர் கருணாநிதி என்பவர் "எல்லோரும் செல்லாதீர்கள்" தொற்று வந்துவிடும் என்று அறிவுரை கூறி அந்தக் கூட்டத்தைத் தடுத்தார். அதனால் ஆசைத் தம்பி என்ற துணை ஆய்வாளர் அவர் கடமை செய்ய விடாமல் தடுத்ததாகவும், தன்னை தாக்கினார் எனவும், பல்வேறு பிரிவுகளில் பொய் வழக்கு போட்டு; சைதாப்பேட்டை சிறை லாக்கப்பில் ஒரு நாள் இரவு வரை காவல்துறை அதிகாரிகள் கண்காணிப்பில் வைக்கப்பட்டார். பிறகு சைதை 18-ஆவது நீதிமன்றத்தில் மருத்துவர் கருணாநிதியை ஆஜர் படுத்தி நீதிபதி ஆனந்த் வேலு என்பவரால் பதினைந்து நாள் சிறைக்கு அனுப்பப்பட்டார். இது அறிந்த கலைஞர்... "கருணாநிதி என்று பெயர் வைத்தாலே கைதா?...." என்று கடுமையான தனது கண்டனத்தைத் தெரிவித்து இருந்தார்.

ஜெயலலிதா 2011 ஆம் ஆண்டு முதலமைச்சர் ஆன போது, வெந்ததும் வராததுமாக; காழ்ப்புணர்ச்சி கொண்டு திமுக முன்னாள் மந்திரிகள், மாவட்டச் செயலாளர்கள், முன்னணியினர் மீது நில அபகரிப்பு எனக் கூறிப் பொய் வழக்குகள் பாய்ச்சிக் காவல் நிலைய அடைப்புகளில், லாக்கப்களில் உட்கார வைத்தார். கைது எனும் பெயரில் அவர்களை ஒவ்வொரு ஊர், ஊராகச் சிறைகள், லாக்கப்புகள் என மாற்றி இழுத்தடித்தார். உண்மையில், அதிமுகவினர் பல பேர் நில அபகரிப்பு செய்து, கோடீஸ்வர நிலச் சுவான்தாரர்களாக வாழ்ந்து வந்தனர். அதைப்போல, ஜெயலலிதா, அவரின் தோழி சசிகலா போன்றவர்கள் கொடநாடு, சிறுதாவூர், சென்னை, காஞ்சிபுரம் போன்ற பல இடங்களில் நில அபகரிப்பு செய்து, பல்வேறு சொகுசு மாளிகைகள் கட்டி, தொழில் செய்தும் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் மீது எந்தவித வழக்கும் பாயவில்லை.

**இந்நிலையில் சேலம் வீரபாண்டி ஆறுமுகம் மற்றும் கழகத்தினர் சிலர் மீது அதிமுக ஆட்சியில் பொய் வழக்குகள் போட்டு சேலம், கோவை,, சென்னை புழல் மற்றும் வேலூர் என மாற்றி, மாற்றிச் சிறையில் வைத்தார் ஜெயலலிதா. அவர்கள் மீது குண்டர் சட்டம் பாய்ச்சப்பட்டது. உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் அதைக் கடுமையாகக் கண்டித்ததுடன் அவர்கள் மீது போடப்பட்ட குண்டர் சட்டத்தை இரத்து செய்தது. இதய நோயாளியான வீரபாண்டி ஆறுமுகம் இறந்தும் போனார்; அதற்குக் காரணம் அதிமுக ஆட்சி தான்.**

ஜெயலலிதா தலைமையிலான அதிமுக கொடுங்கோல் ஆட்சியில், திமுக ஆட்சியின் போது சென்னை மாநகரில் பாலங்கள் கட்டுவதில் கலைஞர் முறைகேடு நடத்தினார் என்று பொய்யான குற்றச்சாட்டுகள் சுமத்தி, வழக்கு உருவாக்கப்பட்டது. (30-06-2001) இல் அவரது இல்லத்தில் நள்ளிரவில் கைது செய்தது தமிழ்நாடு காவல்துறை. விசாரணை என்ற பெயரில் அரசு; சென்னை அரசினர்த் தோட்டத்தில் உள்ள காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றும் இரவெல்லாம் இழுத்தடித்தும் மத்திய சிறைக்கு அழைத்துச் சென்றபோது கலைஞர் சிறை வாசல் முன் தன் மகள் கனிமொழியுடன் அமர்ந்திருந்த மனத்தை உருக்கும் காட்சி! இன்றும் மறக்க முடியாது....

இப்படியான "போலீஸ் ஸ்டேட் "Police State" என்று சொல்லக்கூடிய அளவுக்குக் காவல் நிலையச் சாவுகள் "லாக்கப்" ஆட்சி நடத்திய அதிமுக ஆட்சியினர் பற்றி எடப்பாடிகளும், ஓ.பி.எஸ்.களும் மறந்து, மறைத்து பம்மாத்து அரசியல் பண்ணக்கூடாது!

**கசாப்புக்கடைக் காரர்கள் காருண்யம் பற்றிப் பேசலாமா?**